**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி**
**முன்னிலை : திரு. என். ஞானசம்பந்தம், பி.ஏ.பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**
**2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாள், வெள்ளிக்கிழமை**

**நிறைவேற்று மனு எண்.2/2023**

பழனிச்சாமி --- மனுதாரர்

// எதிர் //

சுப்புராஜ் --- எதிர்மனுதாரர்

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சேனாபதி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.அனிருத் ஆர். கர்கா அவர்கள் முன்னிலையாகியும், இறுதி விசாரணைக்காக 21.09.2023 ஆம் தேதி வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

தீர்ப்பாணையில் காணப்பட்டுள்ள தொகை மற்றும் பின்வட்டி சிலவு வகையறாக்களை எதிர்மனுதாரர்களிடமிருந்து வசூல் செய்திட மேற்படியாருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்துக்கள் உடன்பற்றுகை செய்யப்பட்டுள்ள காரணத்தினால், மேற்படியாருக்கு சி.பி.சி.ஆர்டர் 21, ரூல் 66–ன் படி நோட்டீஸ் மற்றும் இஸ்தியார் ஆகியவைகளை பிரசுரம் செய்து மனுச்சொத்துக்களை ஏலம்போடுவதன் மூலம் மனுத்தொகையினை வசூல் செய்திட உத்தரவிடுமாறு மனுதாரரால் சி.பி.சி. ஆர்டர் 21 ரூல் 66 ன் கீழ் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் பின்வருமாறு:-**</u> கடந்த 27.06.2011ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் எதிர்மனுதாரர் தாவா தொகையை செலுத்தாததால், எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்து தீர்ப்பாணை தொகையை வசூலித்து கொடுக்கும்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே மனுதாரரால் தாக்கல் செய்த நிறைவேற்று மனு கடந்த 08.07.2022ம் தேதியன்று மனுதாரர் தரப்பில் வலியுறுத்தப்படவில்லை என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டு, பற்றுகை உத்தரவு ஆறு மாதகாலம் நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நிறைவேற்று மனுவை அனுமதிக்கும் படி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**3.எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:-**</u>இம்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிறைவேற்று மனு எண்.92/2015 நிலுவையில் இருந்த போது இந்த எதிர்மனுதாரர், மனுதாரரிடம் தீர்ப்பாணை தொகையை பெற்றுக்கொண்டு மனுவை முடித்து வைக்கும்படி கோரியதாகவும், அதன்படி 2022ம் வருடம் தீர்ப்பாணை தொகையை எதிர்மனுதாரர் செலுத்தி விட்டதன் அடிப்படையில் மனுதாரரால் ஒப்புக்கொண்டது போல் மனுவை வலியுறுத்தவில்லை என்றும், அதனால் மனு முடித்து வைக்கப்பட்டது. மனுச்சொத்தானது ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) என்றும், குறைவான தொகைக்கு மனுச்சொத்தை பற்றுகை செய்தால் எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும்,

மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை தாக்கல்.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய விசயம் யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பிலும் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

6. கடந்த 27.06.2011ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் எதிர்மனுதாரர் தாவா தொகையை செலுத்தாததால், எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்து தீர்ப்பாணை தொகையை வசூலித்து கொடுக்கும்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே மனுதாரரால் தாக்கல் செய்த நிறைவேற்று மனு கடந்த 08.07.2022ம் தேதியன்று மனுதாரர் தரப்பில் வலியுறுத்தப்படவில்லை என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டு, பற்றுகை உத்தரவு ஆறு மாதகாலம் நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நிறைவேற்று மனுவை அனுமதிக்கும் படி மனுதாரர் தரப்பு வாதம் முன்வைக்கப்பட்டது.

7. இம்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிறைவேற்று மனு எண்.92/2015 நிலுவையில் இருந்த போது இந்த எதிர்மனுதாரர், மனுதாரரிடம் தீர்ப்பாணை தொகையை பெற்றுக்கொண்டு மனுவை முடித்து வைக்கும்படி கோரியதாகவும், அதன்படி 2022ம் வருடம் தீர்ப்பாணை தொகையை எதிர்மனுதாரர் செலுத்தி விட்டதன்

அடிப்படையில் மனுதாரரால் ஒப்புக்கொண்டது போல் மனுவை வலியுறுத்தவில்லை என்றும், அதனால் மனு முடித்து வைக்கப்பட்டது. மனுச்சொத்தானது ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) என்றும், குறைவான தொகைக்கு மனுச்சொத்தை பற்றுகை செய்தால் எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்வாதம் முன்வைக்கப்பட்டது.

8. எதிர்மனுதாரரால் சொல்லப்படுவது போல் தீர்ப்பாணை தொகை செலுத்தியதற்கு எவ்வித ஆவணங்களும், ரசீதும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே தீர்ப்பாணை தொகை எதிர்மனுதாரரால் தீர்க்கப்பட்டு விட்டது என்பது ஏற்கத்தக்கதாக இல்லை. எதிர்மனுதாரரின் எதிர்வாதம் நிராகரிக்கப்படுகிறது. எனவே இம்மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

**இறுதியாக இம்மனு மனுதாரரின் செலவு தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மேல்நடவடிக்கைக்காக அழைக்க 11.10.2023.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.09.29 17:02:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி:–</u>** இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>** இல்லை

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.09.29 17:02:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.